பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 20 | ஞாயிற்றுக்கிழமை | 06.10.2024 | அதிர்வு 065

# சமலும் 'குட்பாய்'



வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ போட்டியிடமாட்டார் 06



## தமிழரசுக் கட்சியின் ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்துக்காக

# இரு பிரதிநிதிகளை இழக்கும் அபாயம்!

## சுமந்திரனுக்கு வடக்கு, கிழக்கு பிரச்சினைகள் புரியுமோ தெரியாது என்று சாடுகின்றார் சுரேஷ்

(கே.வசந்தன்)

"சுமந்திரனுக்கு வடக்கு, கிழக்கு பிரச்சினைகள் புரியுமோ தெரியாது. தமிழரசுக் கட்சியானது ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்துக்காக திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இரண்டு பிரதிநிதிகளை இழக்கும் அபாய நிலையை ஏற்படுத்தப் போகின்றது."

- இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார். 06

## இலங்கை தொடர்பான முன்னைய தீர்மானத்தை

## கால நீடிப்பு செய்வதற்கான பிரேரணை புதனன்று வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் சாத்தியம்



இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை மேலும் ஓராண்டுக்கு கால நீடிப்பு செய்யக் கோரி பிரிட்டன் 06



வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களைத் தேர்வு செய்வதற்கான தெரிவுக் குழுவின் கூட்டம் இன்று இரண்டாவது நாளாக வவுனியாவில் நடைபெற இருக்கின்றது.

முதல் நாள் – நேற்றைய – கூட்டத்தில், யாழ். மாவட்டத்தில் தற்போதைய எம்.பிக்களான சிறிதரனும் சுமந்திரனும் போட்டியிட வேண்டும் என்ற முடிவு எட்டப்பட்டு இருப்பது, கட்சிக்குள் அண்மைக் காலத்தில் நிலவி வந்த இழுபறிகளுக்கு ஒரு முடிவு கட்டி இருக்கும் என நம்பலாம்.

ஆயினும், இருவருக்கும் இடையிலான முரண்பாடு நீறு பூத்த நெருப்பாகத் தொடர போகின்றது என்பதுதான் களநிலைவரத் தகவல்களாகத் தென்படுகின்னன. 06

# உழவு இயந்திரத்துடன் கனரக வாகனம் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!






(தில்சாத் பர்வீஸ்)

உழவு இயந்திரத்துடன் கனரக வாகனம் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார். மேலும் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கல்முனை - அம்பாறை பிரதான வீதியில் அமைந் துள்ள மல்வத்தை பள்ளிவாசலுக்கு அருகாமையில் நேற்று சனிக்கிழமை மாலை 4.15 மணியளவில் இந்த வாகன விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் உழவு இயந்திரத்தில் பயணித்த சம்மாந் துறை, விளினியடியைச் சேர்ந்த அசனார் முகம்மட் இஸ்மா யில் (வயது 64) என்பவரே மரணமடைந்துள்ளார். அவருடன் பயணித்த ஒருவர் காயமடைந்த நிலையில் அம்பாறை வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த உழவு இயந்திரம் வயலை உழுது விட்டு வீடு திரும்பும் வழியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உழவு இயந்திரத்துடன் மோதிய கனரக வாகனத்தின் சாரதி சம்மாந்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள் ளார்.

விபத்தில் மரணமடைந்தவரின் சடலம் அம்பாறை வைத் தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கு பல்கலைக்கழகத்தின் 28 ஆவது பட்டமளிப்பு விழா






(பழுவூரான்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான 28 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் முதல் இடம்பெற்று வருகின்றது.

இன்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கத்தின் ஒருங்கிணைப்பில் நல்லையா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஓய்வு பெற்ற பேராசிரியர் மா.செல்வராஜா பட்டமளிப்பு விழாவிற்கு தலைமை தாங்குவதுடன் பட்டதாரிகளின் பட்டங்களையும் உறுதிசெய்யவுள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீசாய் முரளி இந்த நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

2340 உள்வாரி, வெளிவாரி, கலாநிதி மற்றும் பட்டப் பின்படிப்பு பட்டங்கள் 2023 ஆம் ஆண்டுக்கான பொது பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக் கது.



# ராமண்ய பீடத்தின் மகா நாயக்க தேரரை சந்தித்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஆசி பெற்றார்

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று முற்பகல் நாராஹேன்பிட்டியில் அமைந்திருக்கும் ராமண்ய பீடத்திற்கு சென்று இலங்கை ராமண்ய பீடத்தின் மகாநாயக்க தேரர் வண. மகுலேவே விமலநாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றுகொண்டார்.

அநுநாயக்க தேரர்கள், பதிவாளர்கள் தலைமையிலான மகா சங்கத்தினர் இதன்போது கலந்துகொண்டிருந்ததோடு, அவர்கள் செத் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினர்.

அதனையடுத்து ஜனாதிபதி தற்போதைய பொருளாதார அரசியல் நிலைமைகள் குறித்து மகா சங்கத்தினருக்கு எடுத்துக்கூறும் வகையில் சிறிது நேரம் கலந்துரையாடினார்.

தூதுவர்களை நியமிக்கும்போது, கற்ற, அறிவார்ந்த, வெளிநாடுகளில் இந்நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய பொறுத்தமானவர்களை நியமிக்குமாறும், ஆளுநர்களை நியமிக்கும்போது அரசியல் நோக்களுங்காக அன்றி பொறுப்பானவர்களை நியமிக்குமாறும் மகா சங்கத்தினர் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர்.

அதேபோல் அமைச்சுக்களின் செயலாளர் பதவிக்கும் பொறுத்தமானவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தினர்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டவாறு தீர்மானங்களை எடுப்பதே தமது நோக்கமாகும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் உரிய மறுசீரமைப்புக்களை செய்ய எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான குழுவினர் மீது வைத்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு மகாசங்கத்தினர் ஆசி என்றும் ஜனாதிபதிக்கு கிட்டும் என வண. மகுலேவ விமலநாயக்க தேரர் தெரிவித்தார்.









# பொது போக்குவரத்து சேவைக்காக பஸ் உள்ளிட்ட வாகன இறக்குமதி

பொது போக்குவரத்து சேவைக்காக பஸ் உள்ளிட்ட வாகன இறக்குமதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து இவ்வாறு வாகனங்கள் இறக்குமதி செய்ய ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டின் முதல் காலாண்டு தொடக்கம் கார் உள்ளிட்ட இலகு ரக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் இவை 3 கட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்படும் எனவும் நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

# அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாகனங்கள் இறக்குமதி செய்ய முடியும்

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மீண்டும் வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும் என எதிர்பார்ப்பதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான நிதியை ஏலவே மத்திய வங்கி ஒதுக்கியுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பரிந்துரைகளையும் மத்திய வங்கி வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 80 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு என்கிறது அமைச்சு



நாட்டில் தொடர்ந்தும் 80 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி மருந்துகளை வைத்தியசாலை மட்டத்தில் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய சிக்கல்கள் இன்றி சிகிச்சைகளை முன்னெடுத்துச்செல்ல முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மருந்து பற்றாக்குறை தொடர்பில் பிரதமர், கலாநிதி ஹரினி அமரசூரிய பல்வேறு சந்தர்ப்பங்களில் அதிகாரிகளிடம் வினவியுள்ளதுடன், நோயாளர்களின் உயிர் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித சிக்கல்களும் ஏற்படாத வகையில் அந்த நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.




# 122 சுயேச்சை குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தின

2024ஆம் ஆண்டுக்கான நாடாளுமன்றத் தேர்தலுக்காக 122 சுயேச்சைக் குழுக்கள் இதுவரை கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் 36 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன என அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலேயே அதிகளவான சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன. மேற்படி இரண்டு மாவட்டங்களிலும், 15 சுயேச்சைக்குழுக்கள்கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளன என தேர்தல்கள் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.



# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 39,698 பேர் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 9,928 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதேநேரம், டெங்கு நோயினால் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 19 பேர் பலியாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு தேர்தலில் நிற்பது தொடர்பில், திருகோணமலை ஆயர் மேற்கொண்ட நடவடிக்கை வெற்றி அளிக்கக்கூடிய சூழல் தென்படுகிறது.

நேற்று மாலை தமிழரசு கட்சியின் தெரிவுக் குழுவின் 11 உறுப்பினர்களில் ஐவர் நேரடியாகத் திருகோணமலை ஆயர் இல்லத்துக்குச் சென்று அவருடன் விரிவான பேச்சுகளில் ஈடுபட்டனர். திருகோணமலை மாவட்டத்தில் வீட்டு சின்னத்தில் ஒரேடியாக எல்லாத் தமிழ் தேசியக் கட்சிகளும் சேர்ந்து ஏழு வேட்பாளர்களை நிறுத்துவதற்கான இணக்கக்கப்பாட்டை ஆயர் ஏற்கனவே தரப்புகளுடன் பேசிப் பெற்றிருந்தார்.

எனினும் ஏழு வேட்பாளர்களில், இரண்டு உறுப்பினர்களின் இடங்கள்தான் தமிழரசு கட்சிக்கு வழங்கப்படும் என்ற நிலைப்பாடு ஆரம்பத்தில் காணப்பட்டது. ஆயினும் அது தமிழரசுக் கட்சிக்கு ஐந்தாகவும் ஏனைய தரப்பினருக்கு இரண்டாகவும் பிரிக்கப்பட வேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் தெரிவு குழு ஒற்றை காலில் நின்றது. கடைசியாக தமிழரசுக் கட்சிக்கு நான்கும், மற்றைய கட்சிகளுக்கு மூன்று இடங்களும் ஒதுக்கும் ஏற்பாடுக்கு இணக்கம் காணப்பப்பட்டதாக அறியப்படுகிறது.

எனினும் அத்தகைய இணக்கத்தை உறுதிப்படுத்துவது இன்று நடைபெறும் என்று தெரிகின்றது.

---

## கால நீடிப்பு செய்வ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்டிருக்கும் பிரேரணை எதிர்வரும் புதன்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் என நம்பத் தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

ஜெனிவாவில் கடந்த செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் முடிவுக்கு வருகின்றது.

அதன்படி கூட்டத் தொடரின் தொடக்க நாளான கடந்த மாதம் 9 ஆம் திகதி இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர்டர்க்கின் எழுத்துமூல அறிக்கை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், உறுப்பு நாடுகளின் பங்கேற்புடன் இலங்கை தொடர்பான விவாதமும் நடைபெற்றது.

இது இவ்வாறிருக்க, "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தலைப்பில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானமானது, கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற 51 ஆவது கூட்டத் தொடரின்போது மீண்டும் கால நீடிப்பு செய்யப்பட்டு தற்போது 51/1 தீர்மானம் எனும் பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்தத் தீர்மானம் செப்டெம்பர் மாதத்துடன் முடிவுக்கு வரும் நிலையில், பிரிட்டன் தலைமையில் அமெரிக்கா, கனடா, மாலாவி, வட மெசிடோனியா மற்றும் மொன்டெனிக்ரோ ஆகிய இணை அனுசரணை நாடுகள் ஒன்றிணைந்து 51/1 தீர்மானத்தை மேலும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குக் கால நீடிப்பு செய்வது குறித்து ஆராய்ந்தன.

அதற்கமைய "இலங்கையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளைமேம்படுத்தல்"எனும்தலைப்பில் இணை அனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்ட முதல் வரைபுக்கு சகல தரப்பினரதும் ஒப்புதல் பெறப்பட்டு, அதனைப் பெரும்பாலும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில் இந்தப் பிரேரணை எதிர்வரும் புதன்கிழமை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும், பெரும்பாலும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் எனவும், இவ்விவகாரத்தில் நெருங்கிப் பணியாற்றி வரும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

---

## சமலும்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி...)

எனத் தெரியவருகின்றது.

எனினும், அவரின் மகன் ஷசீந்திர ராஜபக்ஷ இம்முறையும் களமிறங்குவார் என அறியமுடிகின்றது.

சமல் ராஜபக்ஷ அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்தே நாடாளுமன்றம் தெரிவாகி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## இரு பிரதிநிதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. அதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

"தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் பொதுக் கட்டமைப்பானது தொடர்ந்தும் பணியாற்றும் என்பதை நாம் இரு தரப்பும் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம். அந்தவகையில் இந்த நாடாளுமன்றத் தேர்தலை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடாக சங்கு சின்னத்தில் போட்டியிடுவதற்குத் தீர்மானித்திருக்கின்றோம். போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பான இறுதி முடிவுகள் விரைவில் அறிவிப்போம்.

நாங்கள் பிரிந்து நிற்பதால் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழந்துவிடும் நிலை இருக்கின்றது. கடந்த முறை அம்பாறையில் அந்த இடத்தை இழந்திருக்கின்றோம். எனவே, அங்கு தமிழ் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றுவதற்கான இரண்டு வழிமுறைகளைத் தமிழரசுக் கட்சிக்குக் கூறியிருக்கின்றோம்.

இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம் மற்றும் சி.சிறீதரன் ஆகியோருடன் நானும், செல்வம் அடைக்கலநாதனும், சித்தார்த்தனும் பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டிருந்தோம். எனவே, இரு தரப்பும் இணைந்து வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும்போதே அந்தப் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும். எனவே, எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் உத்தியோகபூர்வமான பதிலை அறிவிக்குமாறு நாம் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

திருகோணமலையில் வீட்டுச் சின்னத்திலும், அம்பாறையில் சங்கு சின்னத்திலும் தேர்தலைக் கேட்கலாம் என நாம் முன்னர் பேசியிருந்தோம். அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது அனைத்து இடங்களிலும் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதாகக் கூறுகிறார்கள். அது நடந்தால் இந்த மாவட்டங்களின் ஆசனங்கள் இழக்கப்படும் நிலையே ஏற்படும்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஐந்து கட்சிகள் மற்றும் 36 இற்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள் ஒன்றுகூடி இந்த முடிவுக்கு வந்துள்ளார்கள். மாறாக எல்லா இடத்திலும் தாங்களே நிற்க வேண்டும் என்றால் இது பிடிவாதமே. தங்களுக்குத் தேசியப் பட்டியலைக் கூட்டிக்கொள்வதே தமிழரசுக் கட்சியின் நோக்கம். ஒரு தேசியப் பட்டியலுக்காக இரண்டு ஆசனங்களை இழக்கப் போகின்றார்கள். இதுபோல ஒரு முட்டாள்தனமான முடிவு எதுவும் இருக்காது.

அத்துடன், சுமந்திரனுக்கு எவ்வளவு தூரம் வடக்கு, கிழக்கு பிரச்சினைகள் புரியுமோ, புரியாதோ என்று எனக்குத் தெரியாது. ஆனால், மாவை சேனாதிராஜா, சிறீதரன் ஆகியோர் இதனைப் புரிந்துகொள்வார்கள்." – என்றார்.



# தானியங்கள் உட்பட பல வகையான பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க விசேட வேலைத்திட்டம்



நாட்டில் தானியங்கள் உட்பட பல்வேறு வகையான பயிர்களின் வருடாந்தத் தேவையை பூர்த்தி செய்வதற்காக விசேட வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பெரும்போகத்திலிருந்து இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சோளம், உளுந்து, பயறு, நிலக்கடலை உள்ளிட்ட பல வகையான தானியங்களின் வருடாந்த அறுவடை நாட்டின் நுகர்வுக்கு போதுமானதாக இல்லை என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி தானியங்களை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் பெருமளவு பணத்தை செலவிட வேண்டியுள்ளதாக செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் சோளத்தின் வருடாந்தத் தேவை 06 மெட்ரிக் தொன்களாக இருப்பதுடன் நாட்டில் 03 மெட்ரிக் தொன்களே உற்பத்தி செய்யப்படுவதாகவும் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் வகையில் விரிவான திட்டத்தின் கீழ் இப்பயிர்கள் பயிரிடப்படும் என அவர் கூறியுள்ளார்.

# தரம் 5 வினாக்கள் கசிந்தமை தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரிக்கை



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இடம்பெறுவதற்கு முன்னர் கசிந்தாக உறுதிப்படுத்தப்பட்ட மூன்று வினாக்கள் தவிர்ந்த மேலும் வினாக்கள் கசிந்திருக்குமாயின் அவை தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய அது தொடர்பான முறைப்பாடுகள் கோரப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தங்களது முறைப்பாட்டை முன்வைக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி முறைப்பாடுகளை நாளைக்குள் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யுமாறு பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ கோரியுள்ளார்.



# தண்ணீர் போத்தலுக்கு கட்டுப்பாட்டு விலை விதிப்பு

சந்தையில் தற்போது 100 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் 500 மில்லி லீற்றர் தண்ணீர் போத்தல் ஒன்றை 70 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும் என மத்திய மாகாண இயற்கை கனிய நீர் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கண்டியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அந்த சங்கத்தின் அழைப்பாளர் சபுமல் குமார இதனைத் தெரிவித்தார்.

இதன்படி தண்ணீர் போத்தல்களுக்கு உடனடியாக கட்டுப்பாட்டு விலையை விதிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆட்டோ கட்டணங்களை நிர்ணயிப்பதில் தாமதம்



மேல் மாகாணத்தில் ஆட்டோ பயணக் கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ள போதிலும் இந்த பணிகள் இதுவரையில் உரிய முறையில் இடம்பெறவில்லை.

மேற்படி அறிவிப்பு வெளியாகி 2 மாதங்கள் கடந்துள்ள போதிலும் அந்தப் பணிகள் தொடர்ந்தும் தாமதமடைந்துள்ளன.

கடந்த ஜுலை மாதம் முதல் ஆட்டோ பயணக் கட்டணத்தைக் குறைப்பதாக மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அறிவித்திருந்தது.

இதற்கமைய முதலாவது கிலோ மீற்றருக்கான கட்டணம் 100 ரூபாவாக தொடரும் எனவும் இரண்டாவது கிலோ மீற்றர் முதல் ஒவ்வொரு கிலோ மீற்றருக்குமான கட்டணம் 90 ரூபாவாக குறைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன், ஆட்டோ பயண கட்டணம் பயணிகளுக்குத் தெரியும் வகையில் மீற்றர் மானியைப் பொருத்தவும், ஆட்டோவின் முன் இடது மூலையில் கட்டணப் பட்டியலைக் காட்சிப் படுத்தவும் பரிந்துரைக்கப்பட்டது.

எவ்வாறாயினும் இந்த விலை செயற்பாடு இன்னும் நடைமுறைக்கு வரவில்லை எனத் தேசிய ஒன்றிணைந்த முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் தொழிற்துறை சங்கம் தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சாலேயின் பதவி விலக்கல்

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து இலங்கையின் அரச புலனாய்வு சேவையின் (SIS) தலைவரும் சர்ச்சைக்குரியவருமான ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே நேற்று சனிக்கிழமை பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

ஆட்சி மாற்றத்தை அடுத்து அவர் பதவி விலகக் கோரப்பட்டார். ஆயினும் அவர் பதவி விலக மறுத்தமையால் பதவி நீக்கம் செய்யப்பட்டார் எனக் கூறப்பட்டது.

அவரது இடத்துக்கு பிரதி பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

மேலும் இதன் மூலம் முதன்மை உளவு நிறுவனமான இலங்கையின் அரச புலனாய்வுச் சேவை கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பொலிஸ் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

நாட்டின் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உணவு, எரிபொருள் மற்றும் மருந்துகளின் கடுமையான தட்டுப்பாட்டிற்கு எதிராகப் பல மாதங்களாக அறகலய போராட்டங்கள் வெடித்தன. அதனை அடுத்து ஜூலை 2022 இல் நாட்டை விட்டு ஓடித் தப்ப வேண்டியவரானார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

தமது வீழ்ச்சிக்கு வழிவகுத்த உளவுத் துறை தோல்விகளுக்கு சாலேயின் கீழ் இயங்கிய அரச புலனாய்வு சேவையின் மீது கோட்டாபய ராஜபக்ஷ குற்றம் சாட்டியிருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராகவும் ஜனாதிபதியாகவும் இருந்த காலத்தில் சர்ச்சைக்குரியவரான சுரேஷ் சாலே அவருக்கு மிக நெருக்கமானவராகவும் அதன் காரணமாக குறுக்கு வழிகளில் பதவி உயர்வுகளைப் பெற்று மேலெழுந்தவராகவும் கருதப்பட்டு வந்தார்.

2015இல் ராஜபக்ஷக்கள் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்ட போது அவர்களை மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டு வருவதற்காக ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல்கள் திட்டமிடப்பட்டன என்ற ஒரு குற்றச்சாட்டு உள்ளது. அதன் பின்னணியுடன் சாலேயைத் தொடர்பு படுத்தி செய்திகள் வெளியாகி வந்தன.

ஏப்ரல் 2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புகளில் ஈடுபட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்ட சாலே மீது நடவடிக்கை எடுக்குமாறு கத்தோலிக்க திருச்சபை தொடர்ந்து அரசாங்கங்களை வலியுறுத்தி வந்தது.

ராஜபக்ஷக்கள் மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்கு வழி வகுக்கும் உறுதியற்ற தன்மையை நாட்டில் உருவாக்கும் நோக்கில், இராணுவப் புலனாய்வு இயக்குநரகத்தில் பணி புரியும் போது, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் சதித்திட்டத்தை சாலேயே திட்டமிட்டார் என 2023 செப்டம்பரில் பிரித்தானியச் செய்தித்தாள் ஒன்று, செய்தி வெளியிட்டது.

2019 நவம்பரில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த சிறிது காலத்திலேயே சாலே அரச புலனாய்வுச் சேவையின் தலைவராகப் பதவி உயர்வு பெற்றார். சமீபத்தில் அவருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஒரு வருட சேவை நீடிப்பு வழங்கப்பட்டது. அது முடிந்ததும், அவர் ஓய்வு பெற்ற அதிகாரியாக மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டார்.

அத்தகைய அதிகாரியே இப்போது பதவியிலிருந்து விலக்கப்பட்டிருக்கின்றார்.

அவர் விலக்கப்பட்டமையுடன் இந்தவிடயம்முடிந்துவிடக்கூடாது. இனிமேல்தான் இவ்விவகாரத்தில் புதைந்திருக்கும் உண்மைகளைக் கண்டறிய உரிய நடவடிக்கைகளை புதிய அரசு முன்னெடுக்க வேண்டும். மக்களுக்கு அரசு இது விடயத்தில் வாக்குறுதி கொடுத்திருப்பதை நினைவூட்ட விரும்புகிறோம்.

# ஹரியானாவில் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பு முடிவு



ஹரியானாவில் 10 ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சிக்கு முடிவு கட்டி காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்கும் என்றும், ஜம்மு காஷ்மீரிலும் காங்கிரஸ் கூட்டணி முன்னணியில் இருக்கும் எனவும் தேர்தலுக்குப் பிந்தைய கருத்து கணிப்புகளின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பு முடிவுகளின் படி, ஹரியானாவில் மொத்தமுள்ள 90 இடங்களில் காங்கிரஸ் கட்சி 55 இடங்களில் வென்று ஆட்சியைப் பிடிக்கும் என்று நான்கு கருத்துக் கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன.

அந்த மாநிலத்தில் ஆட்சியைப் பிடிக்க 46 இடங்களில் வெற்றி பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய எல்லை நிர்ணயத்துக்கு பின்பு ஜம்மு காஷ்மீரில் மொத்தம் 90 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. அதில் காங்கிரஸ் – தேசிய மாநாடு கட்சி கூட்டணி 43 இடங்களைப் பிடிக்கும் என்று முடிவுகள் தெரிவிக்கின்றன. இது ஆட்சி அமைப்பதற்கு தேவையான இடங்களில் 3 குறைவாக இருக்கிறது.

பா.ஜ.கவைப் பொறுத்தவரை ஹரியானாவில் 24 இடங்களிலும், ஜம்மு காஷ்மீரில் 26 இடங்களிலும் வெற்றி பெறும் என்று கருத்துக்கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன. துருவ் ரிசர்ச் மற்றும் பிப்புள்ஸ் பல்ஸ் ஆகிய இரண்டு தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகள் மட்டும் ஹரியானாவில் பா.ஜ.க. அதிகபட்சமாக 32 இடங்களில் வெல்லும் என்று தெரிவித்துள்ளன.

ஹரியானாவில் அபய் சவுதாலாவின் இந்தியன் நேஷனல் லோக் தல் கட்சி 3 இடங்களிலும், பா.ஜ.கவின் முன்னாள் கூட்டாளியான ஜெ.ஜெ.பி. கட்சி ஒரு இடத்தைக் கைபற்றும் என்று கருத்துக்கணிப்பு முடிவுகள் வெளியாகியுள்ளன. ஹரியானாவின் அண்டை மாநிலங்களான டில்லி மற்றும் பஞ்சாப்பில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சியில் இருந்தாலும், இங்கு அக்கட்சியால் தனது கணக்கைத் தொடங்க முடியாது என்றே கணிப்புகள் தெரிவிக்கின்றன.

பத்தாண்டுகளுக்கு பின்பு ஜம்மு காஷ்மீரில் தேர்தல் நடைபெற்றிருக்கும் நிலையில், அங்கு தொங்கு அரசு அமையும் என்ற நிலையே உள்ளது.

காங்கிரஸ் – என்.சி.பி. கூட்டணி 43 இடங்களைக் கைப்பற்றும் என்று மூன்று கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன. பா.ஜ.க 26 இடங்களையே வெல்லும். இது ஆட்சி அமைக்க 46 இடங்களில் வெற்றி பெற வேண்டும். இங்கு பா.ஜ.கவின் முன்னாள் கூட்டாளியான மெகபூபா முஃப்தியின் மக்கள் ஜனநாயக கட்சி 8 இடங்களில் வெல்லும் என்றும், அவர் இந்த முறை ஆட்சியைத் தீர்மானிக்கும் கிங் மேக்கராக திகழ வாய்ப்புள்ளதாக கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

90 பேரவைத் தொகுதிகளைக் கொண்ட ஹரியானாவுக்கு நேற்று வாக்குப்பதிவு நடந்து முடிந்தது. வாக்குகள் ஒக்டோபர் 8 ஆம் திகதி எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகும். ஹரியானா மற்றும் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் ஆட்சி அமைக்க தலா 46 இடங்களில் வெற்றி பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அ.தி.மு.கவை தவிர மற்ற கட்சிகள் தி.மு.கவிடம் அடிபணிந்து விட்டன

## ஆர்.பி. உதயகுமார் தெரிவிப்பு

அ.தி.முகவை தவிர மற்ற கட்சிகள் தி.மு.கவிடம் அடிபணிந்துவிட்டன என்று சட்டமன்ற எதிர்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. அரசை கண்டித்து மதுரை பழங்காநத்தத்தில் ஜெ. பேரவை சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி நடக்கிறது. சட்டசபை எதிர்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் இப்போராட்டம் நடக்கிறது.

இந்த உண்ணாவிரதத்திற்கான ஏற்பாடுகளை சட்டசபை எதிர்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் செய்து வருகிறார். டி.குண்ணத்தூர் ஜெயலலிதா கோவிலில் உண்ணாவிரதம் போராட்டத்தல் பங்கேற்கும் இளைஞர்களுக்கு பயிற்சி முகாம் மூன்றாவது நாளாக நடைபெற்றது. இதில் சட்டசபை எதிர்க் கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார் ஆலோசனை வழங்கினார்.

அப்போது ஆர்.பி. உதயகுமார் பேசுகையில்,

“சமானிய முதல்வராக கே.பழனிசாமி இருந்ததால் மக்களுக்கு நெருக்கமாக அவர் இருந்தார். ஆனால், இன்று திமுக ஆட்சி மக்களிடம் இருந்து வெகு தொலைவு விலகி சென்றுவிட்டது. மக்கள் அ.தி.மு.க. ஆட்சி மீண்டும் வராதா என்று ஏங்குகிறார்கள். அதற்கு அடித்தளமாக மதுரையில் மக்களுடைய பிரச்சினைகளை மையமாக கொண்டு உண்ணாவிதரம் போராட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்களுக்காக குரல் கொடுக்கும் ஒரே இயக்கமாக அ.தி.மு.க. மட்டும உள்ளது. மற்ற கட்சிகள், தி.மு.கவிடம் எம்.எல்.ஏ, எம்.பி. சீட்களுக்காக அடிபணிந்துவிட்டன. கடந்த



சட்டசபைத் தேர்தலில் 520 தேர்தல் வாக்குறுதியை தி.மு.க. அளித்தது. குறிப்பாக ஐந்து ஆண்டுகளில் 50 லட்சம் வேலை வாய்ப்பை வழங்குவோம் என்றும், ஐந்தரை லட்சம் அரசு காலி பணியிடங்களில் நிரப்புவோம் என்று கூறினார்கள். ஆனாலும், எதுவும் நடக்கவில்லை.

இன்றைக்கு நாட்டு மக்களை பற்றி சிந்திக்க முதல்வருக்கு நேரமில்லை. ஏனென்றால் தனது வீட்டு மக்களை நலனை முன்னிறுத்திதான் முதல்வர் செயல்பட்டு வருகிறார். இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கு துரும்பை கூட ஸ்டாலின் கில்லிப் போடவில்லை. இன்றைக்கு இளைஞர்களுக்கு காவல் அரணாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் கே.பழனிசாமியும் மட்டுமே உள்ளார். மூன்று முறை மின்கட்டண உயர்வு, சொத்து வரி உயர்வு, பால் விலை உயர்வு, குப்பை வரிஉயர்வு, குடிநீர் வரி உயர்வு இது ஒரு புறம் இருக்க, தற்போது தமிழகத்தில் கடுமையான விஷக் காய்ச்சல் பரவி வருகிறது. இதற்கு அரசு மருத்துவமனைகளில் மருந்து கூட இல்லை.” – என்றார்.



# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 2,000 இற்கும் மேற்பட்டோர் பலி

லெபனானின் தலைநகர் பெய்ரூட் மீது இஸ்ரேல் கடுமையான வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நாள்களில் 2 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர் என லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களில் 127 சிறுவர்களும் 261 பெண்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள கோலன் குன்றின் மீது ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது இரண்டு இஸ்ரேலிய இராணுவத்தினர் உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.













# ஈரானின் அணுசக்தி தளங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தும்

## ட்ரம்ப் நம்பிக்கை

ஈரானின் அணுசக்தி தளங்களை இஸ்ரேல் தாக்கும் என தாம் நம்புவதாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரான் அணுசக்தி தளங்கள்மீது தாக்குதல் நடத்தப்படுமா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஈரான் தாக்குதல் நடத்தினால் இஸ்ரேல் பதிலடி கொடுக்கும் என நம்புகிறேன்.

எனினும் இஸ்ரேல் மற்றும் லெபனானுக்கு இடைய-ில் ஏற்பட்டுள்ள போர் பதற்ற நிலையை தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம். முழு வீச்சுப் போருக்கு வாய்ப்பில்லை என அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# பயணிகள் சில பொருள்களை விமானத்திற்குள் கொண்டுசெல்ல எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் தடை




லெபனானில் நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து தங்களது நிறுவன விமானங்களில் பயணிக்கும் பயணிகள் பேஜர்கள் மற்றும் வாக்கி டாக்கிகளை எடுத்துச் செல்ல எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் நிறுவனம் தடை விதித்துள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் லெபனான் மற்றும் சிரியாவில் பேஜர்கள், வாக்கி டாக்கிகள் போன்ற தொலைத்தொடர்பு சாதனங்கள் திடீரென வெடித்துச் சிதறின.

இதில் ஹிஸ்புல்லா அமைப்பைச் சேர்ந்த 37 பேர் உயிரிழந்ததுடன் 3,000 பேர் வரையில் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியதாகக் கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்படி தடையை எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.








# தாய்த்தமிழ்ப் பேரவையின் 4ஆம் ஆண்டு நிறைவு விழா

**(ந.லோகதயாளன்)**

தாய்த்தமிழ் பேரவையின் 4 ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் மாலை புதுக்குடியிருப்பு பஸ் நிலைய வளாகத்தில் மிகவும் சிறப்பாக ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் இடம்பெற்றிருந்தது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில், தாய்தமிழ் பேரவையில் பணியாற்றி மக்களுக்காக சமூக தொண்டாற்றி உயிர்த்தியாகம் செய்து மரணித்த 12 உற வுகளின் திருவுருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியதை தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்று,வரவேற்புரை, நடனம், சிறப்புரைகள், கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

சமூகதொண்டாற்றி வரும் தாய் தமிழ் பேரவை அமைப் பானது, பெண்களுக்கான சேமிப்பு, சுயதொழில் ஊக்குவிப்பு, நினைவேந்தல் நிகழ்வுகள், வீடற்ற குடும்பங்களுக்கு வீடு வழங்கலும் புனரமைப்பும், இலவச கண்பரிசோதனை, மூக்குகண்ணாடி வழங்கல், விளையாட்டு நிகழ்வுகளை ஊக்குவித்தல், வாழ்வாதார உதவி ,இலவச தையல் பயிற்சி, மருத்துவ உதவி, இடர்கால உதவி ,கல்விக்கான உதவி, அமரர் புஸ்பராசா நற்பணிமன்றத்தின் இலவச அமரர் ஊர்தி சேவை, வறியோருக்கான மரணசடங்கு என பல்வேறுபட்ட அளப்பெரிய பணிகளை ஆற்றிவருகின்றது.





















# புதிய அரசமைப்பொன்றை கொண்டுவர வேண்டும்

## ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவிப்பு

புதிய அரசமைப்பொன்று கொண்டுவரப்பட வேண்டும் என்பதே தமது நோக்கமாகும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தையில் உள்ள அமரபுர பீடத்தின் தேரர்களிடம் ஆசி பெற்றதன் பின்னர், அவர்களிடம் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று முற்பகல் வெள்ளவத்தை, அமரபுர பீடத்திற்கு சென்று இலங்கை அமரபுர பீடத்தின் பதில் மகாநாயக்க தேரர் வண. கரகொட உயன்கொட மைத்திரிமூர்த்தி தேரரை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

அமரபுர பீடத்தின் செயலாளரும் இதன்போது கலந்து கொண்டிருந்ததோடு, அவர்களால் செத் பிரித் பாராயணம் செய்யப்பட்டு ஜனாதிபதிக்கு ஆசி வழங்கப்பட்டது.

அதனையடுத்து ஜனாதிபதி தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளை எடுத்துக்கூறும் விதமாக மகா சங்கத்தினருடன் சிறிது நேரம் கலந்துரையாடினார்.

அதன்போது நாட்டின் வளங்களை கெண்டு உச்சகட்ட பலன்களை அடைந்து வலுவான நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமென வலியுறுத்திய மகாநாயக்க தேரர்கள், அதனால் இலங்கை உலகில் சுயாதீன நாடாக எழுந்து நிற்க முடியும் என்றும் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டிருக்கும் தருணத்தில் அரசியல் ரீதியான அமைதிக் காலம் நிலவுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, செய்ய வேண்டியுள்ள பல்வேறு பணிகளை தேர்தலில் கிடைக்கும் முழுமையான நாடாளுமன்ற அதிகாரத்தை கொண்டு துரிதமாக செயற்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இம்முறை தேர்தலின் போது எவ்வித வன்முறைகளுக்கும் கலவர நிலைமைகளுக்கும் இடமளிக்காமல் ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் எடுத்துக்காட்டாக செயலாற்றிமைக்கு மகா சங்கத்தினர் பாராட்டு தெரிவித்தனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மதத்தை முன்னிலைப்படுத்தி தற்போதைய ஜனாதிபதிக்கு எதிராக அவதூறு பிரசாரங்களை சிலர் முன்னெடுத்துச் சென்றதாகவும் அவை அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்பது தற்போது உறுதியாகியுள்ளதாகவும் இதன்போது மகா சங்கத்தினர் சுட்டிக்காட்டினர்.

இருப்பினும் இதுபோன்ற அவதூறு பிரசாரங்கள் எதிர்காலத்திலும் முன்வைக்கப்படலாம் என்பதால் அது குறித்து அவதானத்துடன் செயற்படுமாறும் மகா சங்கத்தினர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினர்.

சம்பிரதாய அரசியல் முறை மாற்றப்பட வேண்டும் என்பது ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் ஊடாக தெரியவந்திருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவதூறுகளால் தமது தரப்பினர் குறித்து தோற்றுவிக்கப்பட்ட விம்பத்தை மக்கள் புறக்கணித்திருப்பதால், அவை அனைத்தும் போலிகள் என்பது உறுதியாகியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது புதிய அரசமைப்பு குறித்தும் மகா சங்கத்தினர் ஜனாதிபதியிடம் வினவினர்.

அதன்படி, புதிய அரசமைப்பொன்று கொண்டுவரப்பட வேண்டும் என்பதே தமது நோக்கமாகும் என்றும். நீண்ட கலந்துரையாடல்கள் மற்றும் பொதுமக்கள் வாக்கெடுப்பின் ஊடாக மாத்திரமே அதனை செய்ய எதிர்பார்த்திருப்பதாகவும், கடந்த அரசாங்கங்கள் அரசமைப்பு திருத்தங்களை தமது தேவைகளுக்கு ஏற்பவே செய்துகொண்டதாகவும், மக்களின் தேவைக்கு ஏற்ப திருத்தங்கள் செய்யப்படவில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் நாட்டை ஓரளவு ஸ்திரப்படுத்தி மக்கள் எதிர்பார்ப்புக்கு அமைவாக புதிய அரசமைப்பொன்றை கொண்டுவர எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.







- புருஜோத்தமன் தங்கமயில் -



# திருடப்பட்ட சங்கு; பொறுப்புக் கூறுமா பொதுக் கட்டமைப்பு?!



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய ஒருங்கிணைப்பை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு, அது உருவாக்கப்பட்டு இரண்டு மாதங்கள் நிறையும் முன்னரேயே, அதனை உருவாக்கியவர்களி னால் பலியிடப்பட்டிருக்கின்றது. ஏழு கட்சிகளும், எண்பத்து மூன்று சிவில் அமைப்புக்களும் இணைந்து பொதுக் கட்டமைப்பை உருவாக்கின. தமிழ்த் தேசிய அரசியல், சிவில் சமூக வெளியை ஆரோக்கியமாக்கி, புதிய அரசியல் அத் தியாயத்தை எழுதும் நோக்கம் பொதுக் கட்டமைப்புக்கு இருப்பதாக கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு முன்னும், பின்பும் அதில் அங்கம் வகித்த அரசியல் பத்தியாளர்களினாலும், கட்சிகளின் தலைவர்களினாலும் கூறப்பட்டு வந்தது. ஆனால், பொதுக் கட்டமைப்பு தன்னுடைய உருவாக்க நோக்கம், அடிப்படைகள் மறந்து, தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்று தெரியாமல் அலைந்து கொண்டிருந்த சில கட்சிகளுக்கு ‘சங்கு’ச் சின்னத்தை அடையாளப்படுத்திக் கொடுத்துவிட்டு தன்னுடைய பயணத்தை முடித்துக் கொண்டிருக்கின்றது. இது, பொதுக் கட்டமைப்பு முன்வைத்த தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற விடயத்தை உள்வாங்கி, அதற்காக இயங்கியவர்களுக்கும், வாக்களித்த மக்களுக்கும் செய்யப்பட்ட வரலாற்றுத் துரோகமாகும்.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் பங்குதாரராகிய ஏழு கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபையினருக்கும் இடையிலான ஒப்பந்தத்தின், ஐந்தாவது பகுதி, “தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்தப்படுபவரும் அவருக்கான தேர்தல் சின்னமும் தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான ஒரு குறியீடாக மட்டுமே கருதப்படுதல் வேண்டும்.” என்று வரையறுக்கின்றது. ஆனால், பொதுக் கட்டமைப்புக்கான ஆதரவுத்தளம் விரிந்து செல்கின்றது என்று உணர்நிலையொன்று தோற்றம் பெற்ற போது, பொதுக் கட்டமைப்பினை எதிர்கால தேர்தல் அரசியலுக்கான முதலீடாக மாற்றுவது சார்ந்து அரசியல் கட்சிகளும், அதில் அங்கம் வகித்த பொதுச் சபையின் முக்கியஸ்தர்கள் சிலரும் அணுகினார்கள். ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்திருந்த காலப்பகுதியிலேயே, பொதுக் கட்டமைப்பின் கட்சிகளும் சில பொதுச் சபை முக்கியஸ்தர்களும், பொதுத் தேர்தலை சங்குச் சின்னத்தில் எதிர்கொள்வது சார்ந்தும் ஆசனப் பங்கீடு, தேசியப்பட்டியல் நியமனம் தொடர்பிலும் தங்களுக்கு இடையில் உள்ளக பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆனால், ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு, பொதுத் தேர்தலும் அறிவிக்கப்பட்ட நிலையில், சங்குச் சின்னத்தைக் கைப்பற்றுவது சார்ந்து பொதுக் கட்டமைப்பின் கட்சிகள் (குறிப்பாக முன்னாள் ஆயுத இயக்கங்கள்), அரசியல் பத்தியாளர்கள் அடங்கிய பொதுச் சபையினருக்கு ‘பழம் தின்று கொட்டை போட்ட’ தங்களின் சுத்துமாத்து அரசியல் வரலாற்றை பெரும் பாடமாகப் புகட்டி வெளித்தள்ளியிருக்கின்றன.

அரசியல் பத்தியாளர்கள் பிரதிநித்துவப்படுத்தும் தமிழ் மக்கள் பொதுச் சபை, இப்போது பொதுத் தேர்தலில் இருந்து ஒதுங்கிவிட்டது. சங்குச் சின்னத்தையும் பொதுக் கட்டமைப்பின் கட்சிகள் பாவிக்கக் கூடாது என்று அறிவித்திருக்கின்றது. ஆனால், இது கண்கெட்ட பின்னரான சூரிய வணக்கத்துக்கு ஒப்பானது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், அவருக்கு இருக்கும் தகுதியின் அடிப்படையில் பாக்கியச்செல்வம் அரியநேத்திரன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். கிட்டத்தட்ட அவர் ஒரு சுயேச்சை வேட்பாளர். அவருக்கு வழங்கப்படும் சின்னம், ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட தருணத்தில் இருந்து, தேர்தல் திணைக்களத்துக்கு சொந்தமாகிவிடும். அந்தச் சின்னத்தை, தேர்தலொன்று அறிவிக்கப்பட்டதும் ஐந்து ஆண்டுகள் ஒரே சின்னத்துடன் நிறைவு செய்த எந்தக் கட்சியும் கோர முடியும். அந்தத் தகுதியை வைத்துக் கொண்டு புளொட்டின் தேர்தல் பிரிவுகளில் ஒன்றான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தன்னுடைய குத்துவிளக்குச் சின்னத்துக்குப் பதிலாக சங்குச் சின்னத்தை கோரியிருக்கின்றது. தேர்தல் சட்டங்களின் பிரகாரம், அதனைக் கோருவதற்கான தகுதி, அந்தக் கட்சிக்கு உண்டு. அதனை ஏற்றுக்கொண்ட தேர்தல் ஆணைக்குழுவும், சின்னத்தை வழங்கிவிட்டது. இது, சட்ட ரீதியான அணுகுமுறை. ஆனால், தார்மீக ரீதியாக சங்குச் சின்னத்தை கோருவதற்கான தகுதி, புளொட்டுக்கோ, அல்லது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கம் வகிக்கும் ஏனைய முன்னாள் ஆயுத இயக்கங்களுக்கோ இருக்கிறதோ என்றால், அது கிஞ்சித்தும் இல்லை. அப்படிக் கோருவது, அடிப்படை அறமற்றது. ஏனெனில், பொதுக் கட்டமைப்புக்கான ஒப்பந்தம், பொது வேட்பாளருக்காகப் பெறப்படும் சின்னத்தை எதிர்கால தேர்தல் நிலைப்பாடுகளுக்கு பயன்படுத்தக் கூடாது, அதுவொரு குறியீடாக கடக்கப்பட்டுவிட வேண்டும் என்று வரையறுக்கின்றது.

அரசியல் பத்தியாளர்களையும் பொதுமக்கள் சபையையும் இலகுவாக வலையில் வீழ்த்திவிட்டு, முன்னாள் ஆயுத இயக்கங்கள், சங்கை தூக்கிக் கொண்டு ஓடியிருக்கின்றன. பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் பொதுக் கட்டமைப்பினரும், அரியமும் ஒரு சந்திப்பை நடத்தினார்கள். அந்தச் சந்திப்பில், சங்குச் சின்னத்தில் பொதுத் தேர்தலை எதிர்கொள்வது சார்ந்து முன்னாள் ஆயுத இயக்கங்களினால் விடயம் முன்வைக்கப்பட்டு, அதற்கான பருமட்டான அனுமதியும் பெறப்பட்டுவிட்டது. அதனால்தான், அரியமும், பொதுக் கட்டமைப்பினரும் நடத்திய ஊடக சந்திப்பில், சங்குச் சின்னத்தில் பொதுத் தேர்தலை எதிர்கொள்ளவுள்ளோம் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்தக் கூட்டத்தில்,

தொடர்ச்சி▼





# திருடப்பட்ட சங்கு; பொறுப்புக் கூறுமா பொதுக் கட்டமைப்பு?!

தொடர்ச்சி▲

இரண்டு நாள் அவகாசத்தை பொதுச் சபையினர் கோரியிருந்தாலும், சங்குச் சின்னத்தை கட்சிகள் கோரக்கூடாது என்றோ, பொதுக் கட்டமைப்பின் ஒப்பந்தம் குறித்தோ அவர்கள் சுட்டிக்காட்டி வாதிடவில்லை. ஏனெனில்,


பொதுச்சபையில் இருந்த சில அரசியல் பத்தியாளர்களுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் தேர்தலில் போட்டியிடுவது சார்ந்த எதிர்பார்ப்பு இருந்தது. அதனால்தான், சங்குச் சின்ன விடயத்தை விட்டுப் பிடிக்க முனைந்தார்கள். ஆனால், புளொட்டும், ரெலோவும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் விடயத்தை அந்தப் புள்ளியிலேயே தங்களுக்கான வாய்ப்பாக கருதி, தேர்தல் ஆணைக்குழுவை அணுகி, சங்குச் சின்னத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்காகப் பெற்றுவிட்டன. சங்குச் சின்னத்தை பெறுவதற்கு விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியும் முயன்றிருக்கின்றது. ஆனால், அந்தக் கட்சி மான் சின்னத்தில் ஐந்து ஆண்டுகளைக் கடக்கவில்லை என்ற நிலையில், புதிய சின்னத்தை கோரும் தகுதியை அது இழந்துவிட்டது. அதனால், சங்குச் சின்னம் இப்போது, புளொட்டிடம் சேர்ந்திருக்கின்றது. பொதுச்சபையின் முக்கியஸ்தர்களான பத்தியாளர்களும், ஒருசில புலமையாளர்களும் இப்போது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் தங்களுக்கு துரோகம் இழைத்துவிட்டனர் எனக் கூறுகிறார்கள். ஏமாற்றப்பட்டுவிட்டதாக குற்றஞ்சாட்டுகிறார்கள். சிவில் அமைப்புக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் அவர்கள், பொதுச் சபையின் 'வட்ஸ் –அப்' குழுக்களில் இருந்து விலகிச் செல்கிறார்கள்.

பண்டா – செல்வா ஒப்பந்தம் தொடங்கி தென்னிலங்கையில் ஆட்சிபீடமேறிய அரசாங்கங்களுக்கும் தமிழ்த் தரப்புக்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால், அந்த ஒப்பந்தங்கள் எதிலும் தென் இலங்கை ஆட்சியாளர்கள் உறுதியாக இருந்ததில்லை. அதனை ஒருபோதும் ஒருபொருட்டாக கருதியதுமில்லை. அதனால், தென் இலங்கையுடனான எழுத்து வடிவிலான ஒப்பந்தங்களுக்குச் செல்வதற்கே தமிழ்த் தரப்புக்கள் விரும்புவதில்லை. குறிப்பாக, நல்லாட்சி அரசாங்கத்தின் தோற்றத்திற்காக ஒத்துழைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மைத்திரி – ரணிலுடனான தங்களின் ஒப்பந்தம், இதயங்களுக்கு இடையிலானது என்று கூறியது. தென் இலங்கை ஒப்பந்தங்களின் அடிப்படைகளோடு ஒருபோதும் நின்றதில்லை. ஒழுகியதுமில்லை. அதனை பெரும் குற்றச்சாட்டாக தமிழ்த் தரப்புக்கள் கூறி வந்திருக்கின்றன. அதில், தப்பு இல்லை. ஆனால், அவ்வாறான குற்றச்சாட்டுக்களை தொடர்ச்சியாக முன்வைத்து வரும், தரப்புக்குள் இருந்து பொதுக் கட்டமைப்புக்கான ஒப்பந்தத்தை செய்து கொண்ட தரப்பினர், அதற்கு நேர்மையாக இருந்திருக்க வேண்டும். பொது வேட்பாளர் விடயத்துக்காக பெறப்பட்ட சின்னத்தை, அதன் பின்னர் பயன்படுத்த மாட்டோம் என்ற விடயத்தை ஒப்பந்தத்தில் எழுதி கைச்சாத்திட்டு, அதன் ஈரம் காய்வதற்கு முன்னரேயே, பொதுத் தேர்தலுக்காக அதனை அணுகும் நிலைக்கு செல்வது என்பது கயமைத்தனமானது. அதற்கான பொறுப்பினை, பொதுக் கட்டமைப்பினர் ஏற்று மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்.

முன்னாள் ஆயுத இயக்கங்கள் தங்களை ஏமாற்றிவிட்டன எனக் கூறித் தப்பிக்கொள்ள முயலும் பொதுச் சபையின் பத்தியாளர்களிடம் கேட்கப்பட வேண்டிய முக்கிய கேள்விகள் பல உண்டு. அதாவது, தமிழ்த் தேசிய விடுதலையை வேண்டி போராடப் புறப்பட்ட புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். உள்ளிட்ட ஆயுத இயக்கங்கள் தங்களின் இலக்கை மறந்து தமிழ் மக்களுக்கு கடந்த காலத்தில் இழைத்த கொடுந்துயரங்கள் துரோகத்தனத்தின் உச்சமாகும். சொந்த மக்களையே மனித வேட்டையாடி பலியெடுத்தமை, அரச ஒட்டுக்குழுக்களாக நின்று மக்களை காட்டிக் கொடுத்தமை என்று இந்த முன்னாள் ஆயுத இயக்கங்களின் வரலாறு கறுப்புப் பக்கங்களினால் நிரம்பியது. அவர்கள், எப்போதாவது சொந்த மக்களுக்கு எதிராக நிகழ்த்திய தங்களின் கடந்தகால குற்றங்களுக்காக பகிரங்க மன்னிப்பைக் கோரியிருக்கிறார்களா? தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை ஒருங்கிணைத்ததும், தேர்தல் இலக்குகளை கவனத்தில் கொண்டு அதில் இணைந்து கொண்டதை, தங்களின் வீர தியாக வரலாறாக இந்த முன்னாள் இயக்கங்கள் கருதி, மற்றவர்களுக்கு வகுப்பெடுக்க முயல்கிறார்கள். அதனை, எப்போதாவது அரசியல் பத்தியாளர்கள் சுயசிந்தனையோடு உள்வாங்கியிருக்கிறார்களா? அது தொடர்பில் கேள்வி எழுப்பியிருக்கிறார்களா? புலிகள் இயக்கமே, வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பில் தங்களின் மன்னிப்பை, முஸ்லிம் தரப்பினரிடம் கோரியிருக்கின்றது. இன்றைக்கு அந்த இயக்கம் களத்தில் இல்லை. ஆனால், தொடர் தேர்தல் அரசியலில் இருக்கும் இந்த முன்னாள் ஆயுத இயக்கங்கள் சொந்த மக்களிடத்திலேயே, மன்னிப்புக் கோரும் அடிப்படை மனித அறத்தினைக் வெளிப்படுத்தாதவர்கள். புலிகள் தங்களின் மீது புனித நீரைத் தெளித்துவிட்டார்கள், கூட்டமைப்பின் அங்கமாகிவிட்டதால், தங்களைக் கேள்வி கேட்க முடியாது என்பது இந்த இயக்கங்களின் எண்ணம். அப்படிப் பார்த்தாலும் கூட புலிகள் அழிக்கப்படும் வரையில், அரசோடு சேர்ந்து இயங்கிய புளொட்டிடம் என்ன தார்மீகத்தைக் கண்டு, அவர்களை பொதுக் கட்டமைப்புக்குள் இணைந்துக் கொண்டார்கள் இந்தப் பத்தியாளர்கள்?

தமிழ்த் தேசிய அரசியலை பலப்படுத்த வேண்டிய அவசியம் நீடிக்கின்றது. முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னரான காலத்தில், அதற்காக தமிழ் சிவில் சமூக, புலமைச் சமூகம் முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளது. சிவில் சமூகக் கட்டமைப்பினை கட்சிகளையும் விட ஆளுமையுள்ள தரப்பாக நிலைபெறச் செய்வது அவசியமானது. ஆனால், அதனை அவசரப்பட்டோ, ஏதோவொரு தரப்பினை தேர்தலில் தோற்கடிப்பதற்காகவோ கட்ட முடியாது. ஆனால், ஏற்கனவே காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை தொடங்கி இன்றைக்கு காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்ற பொதுக்

தொடர்ச்சி▼



# திருடப்பட்ட சங்கு; பொறுப்புக் கூறுமா பொதுக் கட்டமைப்பு?!

தொடர்ச்சி▲

கட்டமைப்பு வரையில், குறுகிய தேர்தல் இலக்குகளைக் முன்னிறுத்தி ஆரம்பிக்கப்பட்டவைதான். பேரவையின் இலக்கு சம்பந்தன்– சுமந்திரனின் அரசியல் அணுகுமுறைக்கு மாற்றாக ஓர் அணியைக் கட்டுதல். ஆனால், அது இறுதியாக விக்னேஸ்வரனுக்கு உதிரிக்கட்சியொன்றை ஆரம்பித்துக் கொடுத்ததோடு முடிந்து போனது. இப்போது, அந்த விக்னேஸ்வரன், சாராயக்கடை அனுமதிப் பத்திரங்களை வாங்கிக் கொடுக்கும் தரகு வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பேரவையின் தோல்வியில் இருந்தாவது பாடத்தைப் படித்துக் கொண்டார்களா என்றால், அதுவும் இல்லை. இப்போது சுமந்திரனுக்கு எதிராக அணியொன்றைக் கட்டுவதாக நினைத்து பொதுக் கட்டமைப்பினை உருவாக்கினார்கள். அதற்குள், ரணிலின் பினாமிகள், முன்னாள் அரச ஒட்டுக்குழுக்கள், ராஜபக்ஷவின் முகவர்கள் என்று எந்தவித அடிப்படை நெறியும் இன்றி, அனைவரும் ஒன்றிணைக்கப்பட்டார்கள். அப்படியான தரப்புக்களை ஒன்றிணைத்து அமைக்கப்படும் கட்டமைப்பு எப்படி அறத்தின் அடிப்படைகளைக் கொண்டிருக்கும்? அதுதான், இன்றைக்கு பொதுக் கட்டமைப்பின் பெரும் தோல்வியில் முடிந்திருக்கின்றது. ஒரு பொதுக் கட்டமைப்போ, சிவில் சமூக பேரியக்கமோ அரசியல் ஒழுக்கம், அறம், இலக்கு உள்ளிட்டவையை மனப்பூர்வமாக உள்வாங்கிப் பயணிப்பவர்களைக் கொண்டு கட்டப்பட்ட வேண்டும். மாறாக, குறுகிய சுயலாப கணக்குகளினால் கட்ட முடியாது. அப்படி நிகழ்ந்தால், பேரவை போல, பொதுக் கட்டமைப்பு போல தமிழ் சிவில் சமூக வெளியை கானலாக்கிவிட்டுக் காணாமல் போகும்.

இனி, தமிழ்த் தேசியப் பரப்பில் பரந்துபட்ட சிவில் பேரியக்கம் ஒன்றையோ, கட்டமைப்பு ஒன்றையோ தோற்றுவிப்பது என்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. ஏனெனில், மக்களின் எதிர்பார்ப்புக்களை கட்சிகளும், அரசியல் பத்தியாளர்களும் தொடர்ச்சியாக மலினப்படுத்தி வந்திருக்கிறார்கள். அப்படியான நிலையில், மக்களிடம் மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்துவது என்பது அவ்வளவு இலகுவாதனல்ல. தமிழ் மக்கள் எப்போதுமே, தமிழ்த் தேசியத்துக்காக முழு அர்ப்பணிப்பை வெளியிடத் தயாராகவே இருக்கிறார்கள். ஆனால், அதனை கட்சிகளும், பேரவை, பொதுக்கட்டமைப்பு போன்ற அவசரக்குடுக்கைத்தனங்களும் இலக்கற்ற பயணங்களும் தொடர்ச்சியாக தோற்கடித்து வருகின்றன.

தமிழ் மக்களிடையே அண்மையில் மிகக் கவனம் பெற்றவர் மருத்துவர் அர்ச்சுனா. ஒரு சில நாள்களிலேயே அவர் கதாநாயக பிம்பத்தின் உச்சத்தைத் தொட்டார். மக்களினாலும் சமூக ஊடகங்களிலும் கொண்டாடப்பட்டார். ஆனால், அவர் நாளும் பொழுதும் தன்னுடைய நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டிந்தார். ஒரு கட்டத்தில் அவர், கேலிக்குள்ளாகும் நபராக மாறினார். அப்படித்தான், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினை தங்களின் தலையில் ஏற்றிச் சுமந்த தரப்பினரின் நிலையும், இன்றைக்கு மாறியிருக்கின்றது. பொதுக் கட்டமைப்பினையும், பொது வேட்பாளர் விடயத்தினையும் ஈழப் பிடிப்பின் கூறாக தூக்கிச் சுமந்தவர்கள் இன்றைக்கு ஆமைகள் போல, தங்களின் தலைகளை உள்ளுக்குள் இழுக்கும் நிலை வந்திருக்கின்றது. அந்த நிலையைத் தோற்றுவித்தவர்கள் என்ற வகையில், (முன்னாள் இயக்கங்கள் உள்ளிட்ட) தேர்தல் மைய சுயநலத் தரப்பினரை இணைத்து தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினைக் கட்டிய அரசியல் பத்தியாளர்களும், பொதுச் சபையும் மக்களுக்கு பதிலளிக்க வேண்டும். அதனைவிடுத்து, பொறுப்புக் கூறாமல் பதுங்கி ஓடிவிட்டு சிலகாலம் கழிந்து, புதிய கட்டமைப்பு, தமிழ்த் தேசிய அரசியலைப் பலப்படுத்துவோம் என்று பாடம் எடுக்கின்ற படம் காட்டுகின்ற வேலைகளைச் செய்யாதீர்கள். முதலில், நீங்கள் மக்களின் தலையில் இறக்கி வைத்த அழுக்கு மூட்டைக்கான பதிலைச் சொல்லுங்கள். பொறுப்புக் கூறலுக்காக தொடர்ச்சியாக காத்திருக்கும் தமிழ் மக்கள் அதனை உங்களிடமும் எதிர்பார்க்கிறார்கள்.







# உதிர்ந்து போன பொதுக் கட்டமைப்பு!



- வி.எஸ்.சிவகரன் -

சமூக மாற்றத்திற்காய் சிந்திப்பது என்பது மேன்மையானது. அதை நடைமுறைப்படுத்துவது என்பது அதிலும் உன்னதமானது. கனவுகளை நினைவுகளாக்க முனைவது அதி உன்னதமானது. சுயநலம் கடந்த பொது நிலையில் பன்மைத் துவசமூக நிலையியலை தூய நோக்கு விசுவாசத்தோடு முன்னெடுப்பது என்பது இலகுவில் இலக்கை எட்டி விட முடியாத ஒன்று. விமர்சனங்களைக் கடந்து வீறு கொண்டு எழுவதும், அவற்றை பொருட்படுத்தாமல் இலக்கில் இலட்சியம் கொள்வதும் இலகுவான வழிமுறை அல்ல.

ஆசைக்கும் தேவைக்கும் எண்ணத்து உணர்வுகளுக்குள்ளும் மனிதன் தனது வாழ்வியலின் அங்கத்தைப் புதைத்து வைத்திருப்பது அறிவை விட பட்டறிவு அனுபவமே செயலின் உறுதித் தன்மையை நிறைவுறுத்தும்.

எந்த விதமான முன் அனுபவங்களும் இன்றி சில பத்தி எழுத்தாளர்கள் “தேசமாக திரள்வோம்!” என முன்னாள் ஆயுதக் குழுக்களோடு இணைந்து ஏதோ தமிழீழத்தை தமதாக்கிக் கொள்ளப் போகிறோம் என்பது போல் ஆலாபரணமிட்டு தமிழ்த் தேசியத்தின் இறுதி மீட்பர்கள் தாங்கள்தான் என அதிபிரசங்கிகளாய்ப் புதிய பாதையில் பயணிக்கிறோம், உலக ஒழுங்கின் தமிழ்த் தேசிய விதியை மாற்றுகின்றோம் என சிவில் பிரமுகர்களும் முன்னாள் ஆயுத குழுக்களும் இணைந்து கூட்டமைத்தனர். அதற்கு ஆயுள் அதிகமாக முடியாது எனப் பலமுறை இந்தப் பத்தியில் எழுதி இருந்தேன். கொள்கை சரியாக இருப்பினும், கோட்பாட்டை நடைமுறைப்படுத்துவதில் முரண் நகை ஏற்படும் என பலமுறை கோடி காட்டியிருந்தோம்.

மூன்று தசாப்தத்திற்கு மேலாக அடுத்தவர்களுடைய தவறை வாராவாரம் விமர்சித்தவர்கள் அதைவிட மோசமான தவறில் இப்பொழுது தத்தளிக்கிறார்கள். தமிழ் மக்கள் பேரவை எப்படியாம். மக்கள் பேரவையாக இருந்து, ஒரு பிரமுகர் அமைப்பாக கட்டமைத்து, விக்னேஸ்வரனின் கட்சி தொடக்கத்தோடு காணாமல் போனதோ, இந்த சிவில் பிரமுகர்களும் முன்னாள் ஆயுத குழுக்களும் இணைந்து, சங்குக்கு வாக்கு போடாவிட்டால் தமிழனே இல்லை என கோசமிட்டு, சாமானிய வாக்குகளைத் தமதாக்கிக் கொண்டார்கள். நடந்தது என்ன? இவர்கள் வரித்த கொள்கையிலே இவர்கள் இணைத்த கூட்டிலும், இவர்களால் எழுதிய ஒப்பந்தத்திலுன் மூன்று மாதங்கள் கூட தாக்குப் பிடிக்க முடியவில்லை. இப்பொழுது உணர்ந்திருப்பார்கள் – நாம் பயணம் செய்தது தமிழ்த்தேசிய வாதிகளோடு அல்ல, பதவி சுகம்தேடும் அரசியல் ஆதாய சூதாடிகளோடு என்று. எந்த எச்சரிக்கைக்கும் செவி சாய்க்காது, தாங்கள் பெரிய வல்லவர்கள், அறிவுஜீவிகள் என்று புறப்பட்டார்கள். விளைவு என்னவாகியது? இந்த முன்னாள் ஆயுத குழுக்கள் எத்தனை பேரை ஏமாற்றியவர்கள்....!

இந்த பத்தி எழுத்தாளர்கள் அவர்களுக்கு ஒரு பொருட்டே அல்லர் என்பதை இப்பொழுது பத்தியாளர்கள் புரிந்து இருப்பார்கள். ஆனாலும் கண்கெட்ட பின்னான சூரிய நமஸ்காரம் எதற்கு?மக்களிடமிருந்த குறைந்தபட்ச நம்பிக்கையும் இழக்கச் செய்துவிட்டு, அவர்கள் அமைதியாகிவிட்டார்கள். ஏனெனில் பலர் எச்சரித்தது போல் அவர்கள் ஒன்றும் பொறுப்பு கூறல் அற்ற தனி நபர்களே. அதனால் அவர்களுக்கு சமூகம் பற்றிய கூட்டு கரிசனையோ பதில் அளிக்கும் கடப்பாடோ எதுவும் கிஞ்சித்தும் இல்லை. பொழுதுபோக்கிற்காக நேரம் கிடைக்கின்ற போது கூடிப் பேசக்கூடிய கூட்டம். தமிழினத்தை நடுத்தெருவில் விட்டு விட்டு அகன்று ஓடி விட்டார்கள். முரண்பட்ட – வலிமையான கொள்கை அற்றவர்களோடு சம பங்கு கூட்டமைத்துக் கண்ட பயன் என்ன? இப்பொழுது சங்கும் முன்னாள் ஆயுதக்குழுக்கள் வசமாகிவிட்டது. அதற்கு பத்தியாளர்களும் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கினார்கள். மக்களை ஏமாற்ற வெளியிலே ஒரு நாடகத்தை போடுகி றார்கள். எந்தவிதமான சட்ட அந்தஸ்துமற்ற இந்த பிரமுகர்கள் அரசியல் அறிவுமின்றி, தெளிவுமின்றி, சங்குச் சின்னத்தை வழங்கக் கூடாது என தேர்தல் ஆணையத்துக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள். இந்த ஆண்டின் மிகப் பெரிய நகைச்சுவை இதுதான். இவர்கள் தான் பெரிய அறிவார்த்தமான கருத்தியலாளர்கள். பாவம் இவர்களை நம்புகின்ற ஊடகங்களின் தரத்தைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

இவர்களால் நிகழ்ந்தது தமிழ்க்கட்சிகளுக்குள் குழப்பமும் பிரிவும் உட்பகையும் ஏற்படுத்தப்பட்டதை தவிர தேசமாக திரளவும் இல்லை, இவர்கள் திரட்டிய திரட்சியை இவர்கள் கூறிய சர்வதேச சமூகம் கண்டு கொள்ளவும் இல்லை. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை கண்டு கொள்ளாத சர்வதேச சமூகம் இவர்கள் திரட்டிய வாக்கை கவனித்து விடும் என நம்பி தமிழ் மக்களை தமிழ் அரசியல்வாதிகள் போல் இந்த பத்தியாளர்களும் முட்டாள்களாக்கிவிட்டனர். சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடு வந்து சேராது என்பதைப் போல்தான் அரசியல் அனுபவம் அற்றவர்களின் முயற்சியும் காலத்தோடு இணையாமல் கரைந்து காலாவதியாகிவிட்டது.

இவர்களின் இந்த சிறுபிள்ளை செயலால் எதிர்காலத்திலும் உண்மையான சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களுக்கும் பாரிய சவாலும் நம்பிக்கையீனங்களும் மக்கள் மத்தியில் அவப்பெயரும் போலி பார்வையும் ஏற்படப்போகின்றன. இந்த அமைப்புகள் அற்ற பிரமுகர்கள் சமூக கூட்டுப் பொறுப்புக்கு குந்தகத்தை ஏற்படுத்தி விட்டனர். காலாவதியாகிய தமிழ் அரசியல்வாதிகளுக்கு சற்று முகவரி கொடுத்ததை தவிர இவர்கள் உருப்படியாக எதனையும் ஒப்பேற்றவில்லை. சின்னத்தை மாற்றுவதால் இவர்களின் கடந்த கால பாவங்களுக்கான மோட்ச விமோசனம் கிடைத்துவிடும் என்றோ, இவர்களின் ஏமாற்றுக்கான பரிகாரங்கள் செய்துவிடுவார்கள் என்றோ அல்ல. ஒரு கூட்டில் கையொப்பமிட்ட அவர்களே ஐக்கியமாக செயல்பட முடியவில்லை, ஒரு புறத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடனும் இன்னொரு புறத்தில் சஜித் பிரேமதாஸவுடனும் மாறி மாறி இரட்டை நிலையில் ஈடுபட்டனர். இவர்களால் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அடைந்த பயன் என்ன? அரசியல்வாதிகளால் ஏமாற்றம் அடைந்திருந்த மக்கள் மீண்டும் இவர்களாலும் ஏமாந்துவிட்டனர். விரக்தி அடைந்த வாக்காளர்கள் வரும் தேர்தலில் என்ன செய்யப் போகிறார்கள்? மாற்றத்தை நோக்கி நகரக் கூடிய வாய்ப்பும் உண்டு.

மக்களின் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திய இந்த பத்தி எழுத்தாளர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? இவர்கள் ஏதோ தேவ தூதர்கள் என எண்ணி இவர்களுக்கு பின்னால் அணி திரண்ட புலம்பெயர்ந்த அமைப்புகளும், அங்கு இருக்கின்ற செயற்பாட்டாளர்களும் எவ்வளவு ஏமாளிகள் என்று இப்பொழுது புரிகிறது.

தமிழினம் இவ்வளவு மோசமான நிலைக்கு தள்ளப்

தொடர்ச்சி▼

# உதிர்ந்து போன பொதுக் கட்டமைப்பு!

தொடர்ச்சி▲

பட்டுள்ளது. கடந்த சில மாதங்களில் சாவகச்சேரி முன்னாள் வைத்தியருக்குப் பின்னால் அணி திரண்டு ஓடியது ஒரு முட்டாள் கூட்டம். அதற்கு உருக்கொடுத்து உசுப்பேத்தி வைத்திருந்தது புலம்பெயர்ந்த தேசத்தில் வேலை இல்லாமல் வீடுகளில் இருக்கும் இன்னொரு கூட்டம். தமிழ் மக்களை இப்பொழுது அதிகம் நலிவுறுத்துவதும் அதிகம் விமர்சனத்திற்கு உட்படுத்துவதும் புலம்பெயர்ந்த தேசங்களிலே வேலையில்லாமல் வீடுகளில் இருப்பவர்களே. தமிழ் இனத்திற்கு ஆபத்தானவர்களாக அவர்கள் மாறி வருகிறார்கள். ஏதோ வெளிநாட்டில் இருப்பவர்கள் மட்டும்தான் தமிழ்த்தேசியத்தின் காவலர்கள் போல் தங்களை நினைத்துக் கொள்கிறார்கள். வடக்கு, கிழக்கிலே இவ்வளவு நெருக்கடிக்கு மத்தியிலும் இங்கிருந்து போராடுபவர்களை எல்லாம் அவர்களுக்கு ஏளனமாகவே தெரிகிறது. தமிழர் தாயகத்தை விட்டு புலம்பெயர்ந்த தேசத்திற்கு சொகுசு வாழ்க்கைக்கு பயணிப்பவர்கள் இங்கு இருப்பவர்களுக்கு தேசியம் பற்றி வகுபடுப்பது என்பது போக்கிலித்தனத்தின் உச்சமே. இந்த மக்களுக்காக சிந்திக்கப் போகிறீர்களா? செயல்பட போகிறீர்களா? நல்லது. இங்கு வந்திருந்து மக்களோடு மக்களாக இருந்து போராடுங்கள். ரிமோட் கொண்ட்ரோல் அரசியல் என்பது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. பொதுக் கட்டமைப்புக்கு பின்னுக்கு இருந்த புலம்பெயர்ந்தவர்களும் இந்த தோல்வியிலே பொறுப்பேற்க வேண்டும்.எல்லாம் டொலருக்கும் பவுண்ஸ்க்கும் படாதபாடு படுத்துகிறது.

மக்களினுடைய பொது நம்பிக்கையும் கூட்டு எண்ணத்தையும் சிதைத்து விட்டு இப்பொழுது எல்லோரும் ஒளித்து விட்டனர். தமிழ் மக்களை எத்தனை காலம் தான் இந்த கூட்டம் மாறி மாறி தங்கள் நலன்களுக்கும் விருப்புக்களுக்காகவும் ஏமாற்றப் போகிறார்கள்? மாற்றத்திற்கு மாற்று வழி தேடாமல் ஏமாற்றுக்காரர்களுக்கு வாய்ப்பளித்துள்ளனர்.

பொது கட்டமைப்பினர் கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு செலவழிக்கப்பட்ட கணக்கு விவரத்தைக் கூட இதுவரைக்கும் வெளியிடவில்லை என விமர்சனம் எழுகிறது. ஏனையவர்கள் மேல் இவர்கள் சுமத்திய குற்றச்சாட்டு இப்பொழுது இவர்களைப் பார்த்து சந்தி சிரிக்கிறது. செயலினால் ஏற்படும் விளைவையும் அந்த விளைவை எதிர்கொள்ளக்கூடிய தன்னம்பிக்கையும் மனோதிடமும் வல்லாளுமையும் இல்லாத ஒருவர் சமூகத்தின் எந்த செயலுக்கும் முன் வருவது முற்றிலும் பொருத்தமற்ற ஒன்று. அவ்விதமானவர்கள் தலைமைத்துவ ஆற்றல் உடையவர்களோ செயல்திறன் உடையவர்களோ அறிவார்ந்து உளத்தூய்மையோடு இயங்கக் கூடியவர்களாகவோ இருந்து விட முடியாது. அவர்கள் வெறும் கதை சொல்லிகளாகவே இருந்து விட்டுப் போகலாம். அதற்கும் ரசிகர்கள் நிலை பரிதாபம். அவ்வாறானவர்களை வைத்து தேசக்கட்டுமானமோ தேசிய இருப்பு அடையாளமோ கோட்பாட்டு குறியீடோ என்பது முற்றிலும் பயனற்ற வார்த்தைகளும் இதயம் அற்ற எண்ணங்களும் ஆகும்.. பொது வேட்பாளர் நகர்வில் சகலகட்டங்களிலும் தங்கள் தோல்வியை உணர்ந்திருக்க வேண்டியவர்கள் கட்சிகளாலும் தற்போது நன்கு உணர்த்தப்பட்டு விட்டனர். இனிமேலும் பொது கட்டமைப்பு என இந்தப் பிரமுகர்கள் எவரை கூட்டிக் கதைக்கப் போகிறார்கள் என்பது தான் வேடிக்கையாக உள்ளது. தற்போது அவர்களுக்குள்ளும் அதிக முரண்பாடு உண்டு. வடகிழக்கிலுள்ள பிரதான அமைப்புகள், செயற்பாட்டாளர்களை எல்லாம் புறமுதுகிட்டு, தாங்களே தங்களுக்குள் பதவியை ஏற்படுத்திக் கொண்டனர்.

ஆனாலும் காலம் கலங்கரை விளக்காகவில்லை. ஏனெனில் நீதியும் உண்மையும் நேர்மையும் சத்தியமும் அறமும் சீர் நிலையில் இல்லாத எந்த செயலும் தோற்றே போகும் என்பதற்கு ஆகப் பிந்திய உதாரணம் இதுவல்லவா?

# சிங்கள தேசம் போன்று தமிழர் தேசமும் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்

## மாவீரர்கள் போராளிகள் குடும்ப நலக் காப்பகம் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்கள் சிங்கள பெரும்பான்மைக்குள் கரைந்து போகாமல் தங்கள் தனித்துவத்துடன் ஒற்றுமையாக ஒருசேர நின்று மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான களத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று தமிழ்க் கட்சிகளிடம் மாவீரர்கள் போராளிகள் குடும்ப நலக் காப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையிலையே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளிடம் விடுக்கும் கோரிக்கை எனும் தலைப்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

“2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திப் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் என சகல தரப்புகளும், மக்களின் நலன் கருதி நீண்ட காலமாகவே எமது மக்கள் வேண்டி நிற்கும் அரசியல் அபிலாஷைகளை உண்மையாகவும் உறுதிப்பாட்டுடனும் அடைவதற்கான இன்றியமையாத பின்வரும் நான்கு அம்சக் கோரிக்கைகளை தமிழ் மக்களின் நலன் கருதி எம் அமைப்பானது முன்வைக்கின்றது.

இதற்கமைய குறிப்பிட்ட நான்கு அம்சக் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளும் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அல்லது வேட்பாளர்களுக்கும் எமது அமைப்பானது ஆதரவு வழங்குவது தொடர்பாக பரிசீலிக்கும் என்பதனை பொதுமக்கள் முன்னிலையில் வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

முழு நாட்டிலும் மாற்றத்தை எதிர்பார்க்கின்ற மக்கள் இருக்கின்ற போதிலும் தமிழ் மக்கள் சிங்கள பெரும்பான்மைக்குள் கரைந்து போகாமல் தங்கள் தனித்துவத்துடன் ஒற்றுமையாக ஒருசேர நின்று மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான களத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது கட்சிகளினதும் அரசியல் பிரமுகர்களினதும் தலையாய கடமையாகும்.

இதற்கான அழுத்தங்களைப் பொது அமைப்புக்கள் இந்தக் குறுகிய நாட்களில் மிக வினைத்திறனாக முன்னெடுக்க




வேண்டும்.

1. தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பான எந்த முன்னெடுப்பும் திம்பு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட தாயகம், தேசியம், சுயநிர்ணயம் உள்ளடங்கலான இறுதித் தீர்வை எட்டும் நோக்குடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

2. நடைபெற்று முடிந்த இன அழிப்புக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இன அழிப்புக்குமான பரிகார நீதியைப் பெறும் நோக்குடன் சர்வதேச நீதிக்கான பொறிமுறை உள்ளடக்கப்பட வேண்டும்.

3. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் பெறும் நோக்குடன் சிங்கள அரசோடு தமிழர் தரப்பால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மூன்றாம் தரப்பு நாடு ஒன்றின் நடுநிலையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

4. நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பழைய அரசியல் பிரமுகர்கள் வேட்பாளராக முன்னிறுத்தப்படுவது முற்றாகத் தவிர்க்கப்பட்டு சமூகப் பொறுப்புள்ள அறிவார்ந்த இளைஞர், யுவதிகள் வேட்பாளர்களாக முன்னிறுத்தப்படுவது எம் இனத்தின் எதிர்காலத்துக்குத் தவிர்க்கப்பட முடியாத தேவையாக உள்ளது.

அத்தோடு இதில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் ஆண்களுக்கு நிகராக 50 வீதம் வழங்கப்பட வேண்டும் என்பதும் முக்கியமாகக் கொள்ளப்பட வேண்டும்.” - என்றுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -06.10.2024




உங்கள் ஆற்றலை குறைக்கும் விதத்தில் உங்கள் மனதில் அவநம்பிக்கையான உணர்வுகள் தோன்றும்.நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் செயல்பட்டால் நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம்.

இன்று பணிச்சுமை கடினமாக காணப்படும்.இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.ஆரோக்கியக் குறைபாடு காரணமாக உங்கள் பணிகளை விரைந்து ஆற்ற இயலாது.

நீங்கள் ஆவேசமான மன நிலையில் காணப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே அதனை தவிர்ப்பது நல்லது.

இன்று குறைவான பண வளர்ச்சி காரணமாக குறைந்த பண வரவு காணப்படும். பணத்தை திறமையுடன் கையாள வேண்டியது அவசியம்.

உங்கள் தாயின் உடல் நலனுக்காக நீங்கள் பணத்தை செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.உங்களின் மனநிலையின் மூலம் இது சாத்தியம். உங்கள்நோக்கம் நிறைவேறும் வகையிலான நல்ல முடிவுகளை நீங்கள் எடுப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் பணியில் முன்னனியில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்ப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசி இன்றைய நாளை சந்தோஷமாக கழிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். பணத்தை உங்கள் சொந்த தேவைக்கு பயன்படுத்துவீர்கள் மற்றும் சேமிப்பீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் நம்பிக்கையுணர்வு காரணமாக ஆரோக்கியமாக இருபதாக உணர்வீர்கள்.




இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும் நாள்.எந்த முயற்சி எடுத்தாலும் அதை குறித்த நேரத்தில் முடிப்பது சிறிது கடினமாக இருக்கும்.நீங்கள் பிறரிடம் உரையாடும் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின்பணிச்சூழல் மகிழ்ச்சி அளிப்பதாக காணப்படாது.உங்களின் கடின உழைப்பிற்காக நல்ல பெயரை பெற முடியாத சூழல் காணப்படும்.

உங்கள் துணையால் நீங்கள் புறக்கணிக்கப் படுவது போல உணர்வீர்கள். இம்மாதிரியான உணர்வுகளை தவிர்த்து இன்றைய நாளை சந்தோஷமான நாளாக ஆக்குங்கள்.

அதிகரிக்கும் குடும்ப பொறுப்புகள் காரணமாக இன்று அதிகமாக செலவு செய்ய நேரும்.

உங்கள் தந்தையின் உடல் நலனுக்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.

தோல் அரிப்பு மற்றும் களைப்பு காரணமாக ஏற்படும் போதிய தூக்கமின்மை உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று சிறந்த நாளாக இருக்கும். நீங்கள் இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். இதனால் திருப்தி ஏற்படும். இன்று பயணங்களால் ஆதாயம் ஏற்படும். இன்று வளர்ச்சி பெறுவது உறுதி.

இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மும்மரமாக ஈடுபடுவீர்கள். உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள்.

உங்கள் நலன் குறித்த முக்கிய முடிவு எடுக்க உங்கள் துணை உங்களுக்கு வழி காட்டுவார். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். நிதிநிலை சுதந்திரமாக இருக்கும். பணத்தை நகை மற்றும் ஆடம்பர பொருட்கள் வாங்குவதற்கு பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் மற்றும் தைரியம் நிறைந்து காணப்படும். இதனால் நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்களுக்கு முன்னேற்றம் எளிதில் கிடைக்கும்.சிறிதளவு முயற்சியாயினும் வெற்றி நிச்சயம்.உங்கள் திறமை வெளிஉலகத்தில் பளிச்செனத் தெரியும்.இன்று தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணிகள் மிக அதிகமாக இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த புதிய வாய்ப்புக்களுக்கு நீங்கள் முயலலாம்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இது உங்கள் துணையை திருப்திபடுத்தும்.

இன்று உங்களிடம் பணம் மிகுதியாக காணப்படும். அதை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் தைரியம் மற்றும் திருப்தி காரணமாக உங்கள் ஆரோக்கியம் இன்று சிறப்புடன் காணப்படும்.




இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும்.உங்கள் சிறிய முயற்சியின் மூலம் பெரிய வெற்றி காண்பீர்கள்.இன்று நீங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணி சம்பந்தப்பட்ட முக்கியமான சந்திப்பில் நீங்கள்மூழ்கியிருப்பீர்கள்.இந்த சந்திப்பில் உங்கள் உரையாடலைக் கண்டு உங்கள் சகபணியாளர்கள் ஆச்சரியமடைவார்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று சீரான ஆரோக்கியம் காணப்படும். தேக ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.




இன்று அசௌகரியங்கள் காணப்படும்.அதற்கு உங்கள் மனஅழுத்தங்கள் காரணமாக இருக்கலாம்.மனஅழுத்தத்தைக் குறைக்க நல்ல இசையை கேட்பது திரைப்படங்கள் பார்ப்பது போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுங்கள்.மகிழ்ச்சி கிடைக்கும்.

உங்கள் பணிகளை சமாளிப்பது கடினமாக காண்பீர்கள்.எனவே திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றிக்கு வழி கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணச்சிவசப்படுவீர்கள். இது உறவில் அமைதியையும் நல்லினக்கதையும் பாதிக்கும்.

இன்று பணத்தை கையாள்வது கடினமாக இருக்கும். பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இன்று உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாகலாம். ஆரோக்கியம் சிறப்புடன் இருக்க இதனை தவிர்த்தல் நலம்.

# இன்றைய ராசி பலன்கள் -06.10.2024

## தனுசு

இன்று மந்தமாக காணப்படுவீர்கள்.சுறுசுறுப்புடன் இருக்க வேண்டியது அவசியம்.நல்லதையே நினையுங்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில ஏமாற்றங்களோ அல்லது தடைகளோ காணப்படும்.உங்கள் சக பணியாளர்களுடனான உங்கள் தொடர்பாடல் நற்பலன்களை அளிக்காது.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. இதனை தவிர்த்து நட்புடன் பழகுவது நல்லது.

இன்று செலவுகள்தவிர்க்க முடியாது. எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது. முதுகு வலி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.

## கும்பம்

இன்று துடிப்பான நாளாக இருக்கும். உங்கள் இலட்சியங்களை அடைவதற்கு உகந்த நாள்.நீங்கள் உங்களுக்கென சில செயல்களை அமைத்துக் கொண்டு அதில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் நல்ல காரியங்களுக்கு பயன் செய்வீர்கள்.

இன்றைய நாள் உங்களுக்கு சௌகரியங்கள் வழங்கும் என்பதால் நீங்கள் இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## மகரம்

இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும்.நீங்கள்செய்யும் செயல்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக முடியும்.நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.உங்கள் திறமைகள் பாராட்டைப் பெறும்.உங்கள் செயல்திறன் மூலம் உங்களுக்கு கூடுதல் நன்மைகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான நினைவுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். இன்று உங்களிடம் காணப்படும் அதிகப்படியான ஆற்றல் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்புடன் வைத்திருக்கும்.

## மீனம்

இன்று குறைந்த பலன்களே கிடைக்கும்.இன்று சில ஏமாற்றங்களைக் காண்பீர்கள்.எல்லாவற்றையும் நட்பு முறையோடு அணுகுங்கள்.

நீங்கள் அதிகமாக பணியாற்ற வேண்டியிருக்கும்.அது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.பணியாற்றும் முறையை திட்டமிட்டுஅதற்கேற்றாற் போல செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். இனிமையான வார்த்தைகளைப் பேச வேண்டும். துணையின் விருப்படி நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். உங்கள் குழந்தைக்கு தோள்கள் மற்றும் கணுக்கால்களில் வலி ஏற்படலாம்.
















## யூனியன் அஷ்யூரன்ஸ் சுவமக அறிமுகம்:

# சமூக நலனை மேம்படுத்துவதில் புதிய நியமங்களை ஏற்படுத்தியது

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், தனது பிரதான சமூகப் பொறுப்புணர்வு செயற்திட்டமான சுவமக திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. சமூகத்தின் நலனை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

வாழ்க்கையை பாதுகாத்தல் மற்றும் நலனுக்கு வளமூட்டல் எனும் தனது நோக்கத்தின் பிரகாரம் இயங்கும் நிறுவனம், இந்த சுவமக திட்டத்தினூடாக நாடளாவிய ரீதியில் மக்களுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

இலங்கையில் நீரிழிவு தாக்கத்தை தணிக்கும் நோக்கில் இந்தத் திட்டத்தினூடாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். நீரிழிவு தொடர்பில் விழிபுணர்வு ஏற்படுத்தல், ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை ஊக்குவித்தல், ஆரம்பத்தில் இனங்காணல் மற்றும் இடர் முகாமைத்துவத்துக்கு ஆதரவளித்தல் மற்றும் சமூக ஈடுபாட்டை கட்டியெழுப்பல் போன்ற நான்கு மூலோபாய பிரிவுகளின் அடிப்படையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று தசாப்த காலப்பகுதியில் நாட்டில் நீரிழிவு மற்றும் நீரிழிவுக்கு முந்திய நிலை போன்றவற்றில் அதீத வளர்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் சுவமக திட்டத்தை முன்னெடுக்க நிறுவனம் தீர்மானித்தது. சர்வதேச நீரிழிவு சம்மேளனம், இலங்கையின் அறிக்கையின் பிரகாரம், 2021 ஆம் ஆண்டில் வயது வந்தவர்கள் மத்தியில் நீரிழிவு நிலை 9.8% ஆக காணப்பட்டதுடன், தெற்காசிய பிராந்தியத்தில் இடர் அதிகளவு காணப்படும் நாடுகளில் ஒன்றாக திகழச் செய்திருந்தது.

இந்தப் பிரச்சனை சனத்தொகையில் பெருமளவான பகுதியினரை பாதிக்கும் வகையில் அமைந்திருப்பதுடன், இளம் வயதினர் மத்தியில் நவீன வாழ்க்கை முறைகள் அதிகளவு பின்பற்றப்படுகின்றமை, போதியளவு உடற்பயிற்சி இன்மை மற்றும் அழுத்த நிலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றமை போன்றன இதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. இந்த பின்விளைவுகள் பாரதூரமானவையாக அமைந்திருப்பதுடன், அதிகரிக்கும் அங்கம் இழப்பு வீதம், இருதய கோளாறு, பார்வை இழப்பு, சிறுநீரக செயலிழப்பு மற்றும் அங்கம் இழப்பு போன்ற சிக்கல்களும் அதிகரித்த வண்ணமுள்ளன.

இந்த பாரதூரமான தேசிய பிரச்சனையில் கவனம் செலுத்தும் வகையில் யூனியன் அஷ்யூரன்ஸ், பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனம் எனும் வகையில் சுவமக திட்டத்தை முன்னெடுக்க முன்வந்துள்ளது. முதல் நடவடிக்கையாக, கண்டி சிட்டி சென்றரில் MedEx Expo 2024 நிகழ்வில் நீரிழிவு இனங்காணல் செயற்பாட்டை நிறுவனம் முன்னெடுத்திருந்தது. கண்டி தேசிய வைத்தியசாலையின் மருத்துவ ஆய்வுகூட நிபுணர்களுடன் கைகோர்த்து முன்னெடுத்திருந்த இந்த இனங்காணலின் போது சுமார் 1000க்கும் அதிகமானோர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மஹேஷ் குணரட்ன கருத்துத் தெரிவிக்கையில்,

“எமது நோக்க அடிப்படையிலான செயற்பாடுகளினூடாக அனைத்து இலங்கையர்களினதும் நலனுக்கு வளமூட்டுவது தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் தன்னை ஆழமாக அர்ப்பணித்துள்ளது. எமது சுவமக சமூகப் பொறுப்புணர்வு திட்டம் தொடர்பில் நாம் பெருமை கொள்கின்றோம். நீரிழிவு என்பது அமைதியான ஆட்கொல்லியாக கருதப்படுகின்றது. இந்த தேசிய பிரச்சனை தொடர்பில் அர்த்தமுள்ள உரையாடல்கள் மற்றும் உரிய தீர்மானமெடுத்தல்களில் ஈடுபடுவது முக்கியமானதாக அமைந்துள்ளது.

சுவமக ஊடான எமது அர்ப்பணிப்பினூடாக, நாடளாவிய ரீதியில் அடிமட்டத்திலிருந்து ஆதரவைப் பெற்றுக் கொடுக்க நாம் எதிர்பார்க்கின்றோம். விழிப்புணர்வூட்டல், ஆரோக்கியமான வாழ்க்கைமுறைகளை ஊக்குவித்தல் மற்றும் ஆரம்பத்தில் இனங்காண்பதற்கு ஆதரவளித்தல் போன்றவற்றினூடாக, தனிநபர்கள் மற்றும் சமூகங்களுக்கு தமது சுகாதாரம் தொடர்பில் கட்டுப்பாட்டை கொண்டிருக்க நாம் எதிர்பார்க்கின்றோம். இணைந்த செயற்பாடு மற்றும் தூர நோக்கான இடையீடு போன்றவற்றினூடாக, நீரிழிவை கட்டுப்படுத்துவதில் பெருமளவு பங்களிப்பை வழங்கக்கூடியதாக இருக்கும் மற்றும் தேசத்தின் ஒட்டுமொத்த சுகாதாரத்தை மேம்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.” - என்றார்.




# Dialog Television இல் புதுப்பொலிவுடன் களமிறங்கவிருக்கும் ‘பிக்பாஸ் சீசன் 8’




மக்களை மகிழ்விக்க உலகத்தரமான பொழுதுபோக்கு அனுபவத்தை அளித்திடும் இலங்கையின் #1 தொலைக்காட்சி அனுபவமான Dialog Television இல் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களிடையே ஏகோபித்த வரவேற்பை பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியான பிக்பாஸ் தமிழ் தனது 8 ஆவது சீசனில் “ஆளும் புதுசு.. ஆட்டமும் புதுசு..” என புதுப்பொலிவுடன் கால்தடம் பதிக்கின்றது.

இன்று பிற்பகல் 6:00 மணி முதல் ஸ்டார் விஜய் அலைவரிசையில் (அலைவரிசை எண் 96) ஒளிபரப்பாகவுள்ளது.

15 போட்டியாளர்கள் 100 நாள்கள் ஒரு சொகுசு வீட்டில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு மத்தியில் போட்டிகள் வைக்கப்பட்டு 100 நாள்கள் கடந்து மக்கள் மனதை வெல்பவர் இறுதியில் வெற்றியாளராக அறிவிக்கப்படுவார்.

நகைச்சுவை, போட்டி, காதல், கோபம், வஞ்சம், சோகம் என வீட்டில் நடக்கும் சம்பவங்களை தொகுத்து வார நாள்களில் பி. ப. 9:30 மணிக்கு ஒளிபரப்பாகும். வார இறுதியில் பி. ப. 9:30 மணிக்கு நிகழ்ச்சி தொகுப்பாளர் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடுவார. வாரத்தில் 7 நாள்களும் விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாது செல்லும் இந்நிகழ்ச்சி மக்கள் மத்தியில் உளவியல் குறித்த கலந்துரையாடல்களை அதிகம் ஊக்குவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென்னிந்திய பிரபலங்கள் மட்டுமின்றி இலங்கை மற்றும் மலேசியாவைச் சேர்ந்தவர்களும் இதில் பங்குபற்றி பிரபலமாகியுள்ளனர்.

அந்த வரிசையில் ஜனனி குணசீலன், ஆர்யன் தினேஷ் கனகரட்ணம் (ADK), தர்ஷன் தியாகராஜா, லொஸ்லியா மரியநேசன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் ஜனனி இந்நிகழ்ச்சி மூலம் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி அண்மையில் வெளியான லியோ திரைப்படத்தில் ஓர் கதாப்பாத்திரத்தில் தோன்றி தனது நடிப்புக்கு நல்ல பாராட்டையும் பெற்றார்.

இதுவரை காலமும் உலகநாயகன் கமல்ஹாசன் தொகுத்து வழங்கிய இந்நிகழ்ச்சியை அவருக்காகவே பலர் பார்த்து வந்தனர். தொடர்ச்சியான திரைப்படங்கள் காரணமாக அவர் இதிலிருந்து விலகவே இப்போது ‘மக்கள் செல்வன்’ விஜய் சேதுபதி இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்க தயாராகி வருகிறார்.

கமல்ஹாசன் போல் நடைமுறை வாழ்க்கை மீது எப்போதும் வித்தியாசமான பார்வையை கொண்டிருக்கும் விஜய் சேதுபதி இந்நிகழ்ச்சியையும் புதுப்போட்டியாளர்களையும் அவர்களது அட்டகாசங்களையும் எப்படி கையாளப்போகிறார் என்பது பலர் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

பிக்பாஸ் 8 நிகழ்ச்சியை போலவே ஹிந்தியில் பிக் பாஸ் 18 அதே ஒக்டோபர் 6 ஆம் திகதி பி. ப. 9 மணிமுதல் Colors TV அலைவரிசையில் (அலைவரிசை எண் 88) ஒளிபரப்பாகிறது.

இதனை சல்மான் கான் தொகுத்து வழங்குகிறார். இவ்விரு அலைவரிசைகளையும் Dialog Television Super Max பக்கேஜ் வழியாக மாதம் வெறுமனே 998 ரூபா செலுத்தி கண்டுகளிக்கலாம். இவ்விரு அலைவரிசைகள் மாத்திரமன்றி உங்கள் அபிமான தமிழ் மற்றும் ஹிந்தி அலைவரிசைகள் உள்ளடங்கலாக மொத்தம் 93 அலைவரிசைகளை இதன் மூலம் கண்டுகளிக்கலாம்.

ஒவ்வொரு நாளும் அதே நேரத்தில் நிகழ்ச்சியை பார்க்க முடியாவிட்டால் கவலை வேண்டாம். Dialog Television ViU Hub my;yJ ViU mini இல் நீங்கள் தவறவிட்ட நிகழ்ச்சியை 72 மணிநேரத்திற்குள் பார்க்கக்கூடிய Catch Up வசதி உள்ளது. அதேவேளை வாடிக்கையாளர்கள் Dialog ViU app வழியாக எங்கிருந்தாலும் எந்நேரத்திலும் தமது மொபைல் வழியாகவே நிகழ்ச்சியை பார்த்து ரசிக்கலாம். டயலொக் இணைப்பிற்கு னுயவய கட்டணம் அறவிடப்படமாட்டாது. நீங்கள் Dialog Television வாடிக்கையாளராக இருந்தால் எந்தவொரு சந்தாக்கட்டணமும் Data கட்டணமும் இன்றி ஏரை App வழியாக உங்களுக்கு விருப்பமான நிகழ்ச்சிகளை கண்டுகளிக்கலாம்.




## கண்புரை அறுவைச் சிகிச்சைகள்:

# மக்களின் வாழ்க்கையினை மாற்றியமைப்பதில் ஹெல்ப்ஏஜ் ஸ்ரீலங்காவிற்கு கைகொடுக்கும் AIA



AIA இன்சூரன்ஸ் மிகவும் உதவிகள் தேவைப்படும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கையினை மேம்படுத்துவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பினை உறுதிப்படுத்தும் வகையில் ஹெல்ப்ஏஜ் ஸ்ரீலங்காவுடன் கைகோர்க்கின்றது.

இந்த நன்கொடைத் திட்டமானது மிகவும் தேவையுடைய வறுமைப்பட்ட நோயாளிகளுக்கு பத்து கண்புரை அறுவைச் சிகிச்சைகளுக்கு நிதியுதவியினை அளித்துள்ளதுடன், இதன் மூலமாக அவர்களுக்கு விலைமதிப்பற்ற கண்பார்வையினையும் மீண்டும் பரிசாக வழங்குகின்றது.

கண்புரை அறுவைச் சிகிச்சை என்பது ஒருவரின் வாழ்க்கையினை மாற்றியமைக்கும் ஒரு சத்திர சிகிச்சையாகும். இது பார்வையினை மீட்டெடுப்பது மட்டுமன்றி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்துகின்றது. மேலும் இது தனிநபர்கள் தங்களின் சுதந்திரத்தினை மீண்டும் பெறவும் அவர்களின் குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குத் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்வதற்கும் உதவுகின்றது.

AIA இன்சூரன்ஸ் இந்த நன்கொடையினை வெசாக் காலத்தின் போது இடம்பெற்ற AIA பியவர பூஜை எனப்படும் இலங்கையின் முதலாவது மக்களின் உதவியுடன் வடிவமைக்கப்பட்ட டிஜிட்டல் தோரணத்தின் (பந்தல்) நேர்மறையான தாக்கத்தினை விரிவுபடுத்துவதற்கான மிகவும் அர்த்தமுள்ள வழியாகவே ஏற்பாடு செய்திருந்தது.

இப்புதுமையான முயற்சியானது இலங்கையர்கள் நடைப்பயிற்சி போன்ற ஆரோக்கியமான வாழ்க்கைப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பதற்காக உறுதிமொழி எடுப்பதற்கு அவர்களை ஊக்குவிக்கும் அதேவேளை இவ்வாறான ஒரு பெரிய நோக்கத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றது.

நிகழ்வின் போது மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு உறுதிமொழியும் ஹெல்ப்ஏஜ் ஸ்ரீலங்காவுக்கு நேரடியாகவே உதவியிருந்ததன் விளைவாக கண்புரை அறுவைச் சிகிச்சைக்கும் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது.

தனிப்பட்ட ஆரோக்கியத்தை மேம்படுத்தும் செயலை சமூகப் பொறுப்புடன் இணைப்பதன் மூலம் AIA தனிநபர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதோடு மட்டுமன்றி உதவிகள் தேவைப்படும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கையினையும் மேம்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டினையும் வலுப்படுத்தியிருந்தது.

# HDFC வங்கி நவீன இணைய தளத்துடன் வாடிக்கையாளர் வசதிகளுக்கு முன்னுரிமை

இலங்கையின் HDFC வங்கி அண்மையில் தனது கூட்டாண்மை இணையதளத்தினை மீண்டும் அறிமுகம் செய்துள்ளது.

இந்த வகையில் பாவனையாளர்களின் உயர்ந்த அனுபவம் மற்றும் அணுகல் முறைகளை விருத்தி செய்யும் வகையிலும் அதே போல் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கும் வகையிலும் புதிய அம்சங்களுடன் இணையதளம் வடிவமைக்கப்படுகிறது.

புதிய இணையதளம் எளிதான வழிச் செலுத்தலுடன் புதிய உள்ளுணர்வு வடிவமைப்பினைக் கொண்டுள்ளது. இது பல்வேறு மொழி விருப்பங்களுக்கு இடமளிக்கும் மும்மொழி செயல்பாடு கொண்டுள்ளதுடன் மேலும் எந்தவொரு பிரிவிலும் தடையற்ற அனுபவத்திற்காக கையடக்க தொலைபேசியில் பதிலளிக்கக் கூடிய தளவமைப்பினைக் கொண்டுள்ளது. எழுத்துரு அமைவு மாற்றம், வர்ண வேறுபாடு மாற்றம், திரை வாசிப்பு சாத்திய தன்மை போன்ற அணுகல் அம்சங்கள் யாவும் பாவனையாளர்களுக்கு உள்ளடக்கப்படுவதை இந்த இணையதளம் உறுதி செய்கிறது.

HDFC வங்கி புதுவகையிலான மற்றும் சாத்தியமான நிதி



தீர்வுகளை வழங்குவதில் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது. எங்கள் வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளுக்கு ஏற்ப பாவனையாளர் நலன் சார்ந்த ஒரு நவீன தளத்தினை வழங்குவதில் இந்த அர்ப்பணிப்பு இடம்பெறுகிறது.

இந்த குறிப்பிடத்தக்க வளர்ச்சியானது, இலங்கையர்களை பலப்படுத்தி டிஜிட்டல் வலையமைப்பு ஊடாக சமூகத்தினரின் நிதி வளர்ச்சியினை வழிநடாத்தும் எமது பணியுடன் ஒத்திசைவாக காணப்படுவதாக பொதுமுகாமையாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி நிஷாமன் கருணாபால தெரிவித்தார்.